# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## <u>இயல்பு கூட்ட அறிக்கை</u>

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 30–04–2018 திங்கட் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் இயல்புக் கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி
நாள்: 27–04–2018

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

**பொருள் எண் 1 :**

நகராட்சி ஆணையர் அவர்களின் ஏப்ரல்–2018 மாதத்தின் நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**பொருள் எண் 2:**

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி அமைத்தும் மற்றும் முன்சீப் கோர்ட் சாலையில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் நிழலகத்தில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் விளம்பர பலகைகள் வைத்து விளம்பரம் செய்து கொள்ளவும், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

**(ந..கஎண்.696/2017/அ2)**

**பொருள் எண் 3:**

இந்நகராட்சியின் ஓராண்டு சாதனைகளை, தமிழக அரசின் ஓராண்டு சாதனை சிறப்பு மலரில் வெளியிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருவாரூர் அவர்களின் உத்தரவின்படி தினமலர், தினத்தந்தி மற்றும் தினபூமி நாளிதழில் வெளியிடப்பட்டது. அதற்கான கட்டணத் தொகை ரூ.62160/–ஐ கீழ்க்கண்ட விபரப்படி வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | <u>ரூ.</u> |
|---|---|---|
| 1. | தினமலர் | 25200/– |
| 2. | தினத் தந்தி | 26460/– |
| 3. | தின பூமி | 10500/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந..கஎண்.788/2018/இ1)**

**பொருள் எண் 4:**

இந்நகராட்சியின் மாநில பேரிடர் மேலாண்மை நிவாரண நிதி **2018–19**–ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அரசாணை எண். G.O (M.S.) No.89, Revenue and Disaster Management (DM-II) Department, Dated 03.03.2018–ன் படி அனுமதி வரப்பெற்று வார்டு எண்.**15** வாணக்கார வீதியில் தற்காலிகமாக சாலை மேம்பாடு செய்தல் பணி ரூ.**1.10** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்:268, நாள்.28.03.2018-ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டு **26.04.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | பி. கண்ணன் | 1,10,000/– | **106445.15** | 0.02% குறைவு |
| 2 | எஸ். மங்கையர்கரசி | | **106741.00** | 0.26 % அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.02** சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.பி.கண்ணன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.கஎண்.1007–1/2018/இ1)**

**பொருள் எண் 5:**

இந்நகராட்சியின் மாநில பேரிடர் மேலாண்மை நிவாரண நிதி **2018–19**–ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அரசாணை எண். G.O (M.S.) No.89, Revenue and Disaster Management (DM-II) Department, Dated 03.03.2018–ன் படி அனுமதி வரப்பெற்று வார்டு எண்.**20** திரௌபதியம்மன் தெரு சாலையில் தற்காலிகமாக சாலை மேம்பாடு செய்தல் பணி ரூ.**1.90** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்:**268**, நாள்.**28**.03.2018-ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டு **26.04.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | பி. கண்ணன் | 1,90,000/– | **183139.65** | 0.02% குறைவு |
| 2 | எஸ். மங்கையர்கரசி | | **183711.00** | 0.29 % அதிகம் |

அலுவலக குறிப்பு : – வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.02** சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.பி.கண்ணன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.கஎண்.1007–2/2018/இ1)**

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

.